**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : சரவணகுமார்**

**தேதி 28.05.2025 நேரம் மாலை 6.10 மணி**

---

**தலைப்புச் செய்திகள்**

பிரதமர் திரு நரேந்திர மோடி, நாளை முதல், சிக்கிம், மேற்குவங்கம், பீகார், உத்திரபிரதேஷ் ஆகிய மாநிலங்களுக்கு, 2 நாள் பயணம் மேற்கொள்கிறார்.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை தொடர்பாக, அரசால் அமைக்கப்பட்ட, அனைத்து கட்சி பிரதிநிதி குழுக்கள், பல்வேறு நாடுகளில் இந்தியாவின் நிலைப்பாடுகளை எடுத்து கூறி வருகின்றன.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்புக் காஷ்மீரை இந்தியாவிடம் ஒப்படைக்க அந்நாடு தவறினால், ராணுவ நடவடிக்கைகளை சந்திக்க நேரும் என, மத்திய இணை அமைச்சர் திரு ராம்தாஸ் அத்வாலே கூறியுள்ளார்.

விவசாய வளர்ச்சிக்கான மத்திய அரசின் விக்சித் கிருஷி சங்கல்ப அபியான் - பிரச்சார இயக்கம், புதுச்சேரி உட்பட, நாட்டின் 700 மாவட்டங்களில், நாளை முதல், அமலாக உள்ளது.

மோடி மாநிலங்கள் (18)

பிரதமர் திரு நரேந்திர மோடி, நாளை முதல், சிக்கிம், மேற்குவங்கம், பீகார், உத்திரபிரதேஷ் ஆகிய மாநிலங்களுக்கு 2 நாள் பயணம் மேற்கொள்கிறார். இப்பயணத்தின் போது மொத்தம் 70 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில், பல்வேறு வளர்ச்சி திட்டங்களை அவர் தொடங்கி வைத்தும், வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். சிக்கிம் தனி மாநிலமாக உருவாகி 50 ஆண்டுகள் ஆவதை ஒட்டி, அங்கு நடைபெறும் விழாவில், பிரதமர் கலந்து கொண்டு, விழா மலரையும், நினைவு தபால் தலை மற்றும் நாணயத்தையும் வெளியிடுகிறார். கேங்டாக் மாவட்டம் சங்கோலாவில் நிறுவப்பட்டுள்ள **பாரத் ரத்னா அடல் பிகாரி வாஜ்பாய்** சிலையை அவர் திறந்து வைக்கிறார். தொடர்ந்து, மேற்கு வங்க மாநிலத்தில் **அலிப்பூர்துவார்** மற்றும் **கூச்பீகார்** மாவட்டங்களுக்கான, நகர்புற எரிவாயு விநியோக திட்டம் உட்பட பல்வேறு திட்டங்களை பிரதமர் தொடக்கி வைக்கிறார். நாளை மாலை பீகாரில் பட்னா விமான நிலையத்தின் புதிய **முனையக் கட்டிடத்தை** பிரதமர் திறந்து வைக்கிறார். நாளை மறுநாள் பீகார் மாநிலம் **காராக்கட்** பகுதியிலும், அதைத் தொடர்ந்து உத்திரபிரதேஷ் மாநிலம் **கான்பூர் நகர்** பகுதியிலும் பல்வேறு திட்டங்களை பிரதமர் தொடக்கி வைத்து உரையாற்றுவார் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

அனைத்து கட்சி குழு (15)

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை பற்றிய இந்தியாவின் தூதரகப் புறவீச்சு முயற்சிகளின் ஒரு பகுதியாக அரசால் அமைக்கப் பட்டுள்ள, 7 அனைத்து கட்சி பிரதிநிதி குழுக்களில், ஜேடியு நாடாளுமன்ற உறுப்பினர் திரு சஞ்சய் ஜா தலைமையிலான குழுவினர், ஜப்பான், தென்கொரியா மற்றும் சிங்கப்பூர் பயணத்தை முடித்துக் கொண்டு இன்று இந்தோனேஷியா சென்றுள்ளனர். சிவசேனா எம்பி, திரு ஸ்ரீகாந்த் ஷிண்டே

தலைமையிலான அனைத்து கட்சி குழுவினர் காங்கோ ஜனநாயக குடியரசில் தங்களின் பயணத்தை முடித்துக் கொண்டு, சியாராலியோன் சென்றுள்ளனர். பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் திரு ரவிசங்கர் பிரசாத் தலைமையிலான குழுவினர் இத்தாலி சென்று சேர்ந்துள்ளனர். இதற்கிடையே, காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் திரு சசிதரூர் தலைமையிலான அனைத்து கட்சி குழுவினர் இன்று பனானாவில் அந்நாட்டின் நாடாளுமன்ற தலைவரை சந்தித்து, பேசினர். தேசியவாத காங்கிரஸ் எம்பி திருமதி சுக்ரியா சுலே தலைமையிலான அனைத்து கட்சி குழுவினரும் இன்று தென்னாப்பிரிக்காவில் இதே போன்ற செயல்பாடுகளில் ஈடுபட்டனர்.

*பரம் வீர் சக்ரா* 1 (7)

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் வெற்றியை நாம் கொண்டாடி வரும் வேளையில், இந்தியப் படையினரின் வீரத்தை நாடே போற்றுகிறது. இந்தியப் படையினருக்கு புகழாரம் சூட்டும் வகையில் ஆகாஷ்வாணி செய்திப் பிரிவு, சிறப்பு தொடர் ஒன்றை ஒலிபரப்பி வருகிறது. அந்த வரிசையில், 1962ஆம் ஆண்டு சீனா-இந்தியா போரில் நாட்டிற்காக உயிர்தியாகம் செய்து, பரம்வீர் சக்ரா விருது பெற்ற, சுபேதார் ஜோகிந்தர் சிங் குறித்து ஒரு செய்தி தொகுப்பு....

**(வாய்ஸ்)**

*பரம்வீர் சக்ரா* 2 (16)

**(வாய்ஸ்)**

<u>1962 ஆம் ஆண்டு சீனா-இந்தியா போரின் போது, சுபேதார் ஜோகிந்தர் சிங் தலைமையிலான படைக்குழு, வடகிழக்கு எல்லை பிராந்தியத்தின் தவாங் பிரிவில், பம் லா கணவாய்க்கு உட்பட்ட, தோங்பெங் லா பகுதியின் முக்கிய மலைவரம்பு ஒன்றில் நிலை கொண்டிருந்தது. அக்டோபர் 20 ஆம் தேதி, மக்மோகன் எல்லைக் கோட்டிற்கு அப்பால்,</u>

தாக்குதலுக்கான முன்னேற்பாடாக சீன துருப்புகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வருவதை இக்குழுவினர் கவனித்தனர். அக்டோபர் 23 ஆம் தேதி அதிகாலை சீன துருப்புகள், பீரங்கிகள் மற்றும் குண்டுவீச்சுகளின் ஆதரவுடன், தலா 200 பேர் அடங்கிய 3 அலைகளாக, முக்கிய தாக்குதலை தொடக்கினர். சுபேதார் சிங் தலைமையிலான படைக்குழுவில் ஜவான்களின் எண்ணிக்கை குறைவாகவே இருந்த நிலையிலும், இவர்கள் வலுவான எதிர் தாக்குதலில் ஈடுபட்டு, எதிரி படைகளின் ஆரம்ப அலைகளுக்கு பெரும் இழப்பு ஏற்படுத்தினர். இதில் சுபேதார் சிங்கிற்கு தொடையில் காயம் ஏற்பட்ட போதிலும், போர்க் களத்தில் இருந்து அகற்றப்பட அவர் மறுத்த விதத்தினால், சக வீரர்கள் பேரூக்கம் பெற்றனர். எதிரி படைகளின் கடைசி அலை வலுவாக மேலேறி வந்தபோது, வெடிமருந்துகளின் கையிருப்பு குறைந்துவிட்ட நிலையிலும் சுபேதார் சிங், இலகுரக இயந்திர

*பரம்வீர் சக்ரா* 3 (9)

துப்பாக்கி ஒன்றை தம் வசப்படுத்தி, எதிரிகளுக்கு கடும் சேதம் விளைவித்தார். இறுதியில் நிலைமைகள் இன்னும் மோசமாகி எதிரிபடைகளின் கை ஓங்கிய போதிலும், அதற்கு முன்பே, சுபேதார் சிங் படைக்குழுவில் எஞ்சியிருந்த வீரர்கள், தங்களின் **துப்பாக்கி முனை ஈட்டி** மூலம் அயராது தாக்கி எதிரி படையினர் பலரை கொன்றனர். இத்தகைய, அசாதாரண துணிச்சல், தலைமைத்துவம் மற்றும் கடமைப் பற்றுக்காக, சுபேதார் ஜோகிந்தர் சிங்கிற்கு, மரணத்திற்கு பிந்தைய முறையில் **பரம்வீர் சக்ரா விருது வழங்கப்பட்டது.**

*ராம்தாஸ் அத்வாலே 1* (16)

பாகிஸ்தான் ஆக்கிரமிப்புக் காஷ்மீரை இந்தியாவிடம் ஒப்படைக்க அந்நாடு தவறினால் எதிர்காலத்தில் போர் மற்றும் ராணுவ நடவடிக்கைகளை சந்திக்க நேரும் என்று மத்திய சமூக நீதி மற்றும்

அதிகாரமளித்தல் துறை இணை அமைச்சர் திரு ராம்தாஸ் அத்வாலே கூறியுள்ளார். இன்று புதுச்சேரியில் செய்தியாளர் கூட்டம் ஒன்றில் பேசிய அவர், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை, தீவிரவாதிகளையும், தீவிரவாத முகாம்களையும் அழிக்கும் நோக்கத்தில் மேற்கொள்ளப்பட்டதே தவிர, சிவிலியன்கள் தாக்கப்படவில்லை என்றார். போர் நிறுத்த ஒப்பந்தததில் அமெரிக்காவிற்கு எந்த பங்கும் இல்லை என்றும் அவர் தெளிவுபடுத்தினார். கேள்வி ஒன்றுக்கு அவர் பதிலளிக்கையில், மனித கழிவுகளை, மனிதர்களே அகற்றும் நிலையை மாற்றும் வகையில், இயந்திரங்கள் மூலம் கழிவு நீர் தொட்டிகளை சுத்திகரிக்க, நகராட்சிகளுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளதாக கூறினார். ஜாதிவாரி கணக்கெடுப்பு மேற்கொள்வதான நரேந்திர மோடி அரசின் முடிவினால் பல்வேறு சாதியினரின் கல்வி மற்றும் சமூக பொருளாதார நிலை குறித்து துல்லியமான தரவுகளை சேகரிக்க ஏதுவாகும் என்றும் திரு அத்வாலே குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்……

**(வாய்ஸ் - அத்வாலே)**

*விவசாயி* (17)

விவசாய வளர்ச்சிக்கான மத்திய அரசின் **விக்சித் கிருஷி சங்கல்ப அபியான்-** பிரச்சார இயக்கம், நாட்டின் 700 மாவட்டங்களில், அனைத்து வேளாண் அறிவியல் நிலையங்கள் மூலமாக, நாளை முதல், வரும் ஜூன் 12 ஆம் தேதி வரை அமலாக உள்ளது. புதுச்சேரியில், பெருந்தலைவர் காமராசர் வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் திருக்காஞ்சி கோவில் திருமண மண்டபத்தில் நாளை நடைபெறும் நிகழ்ச்சியில், மாநில வேளாண் அமைச்சர் திரு ஜெயக்குமார், காரைக்காலில், தலத்தெரு கூடுதல் வேளாண் இயக்குநர் அலுவலக கருத்தரங்க கூடத்தில், நாளை நடைபெறும் நிகழ்ச்சியில், குடிமைப் பொருள் வழங்கு துறை அமைச்சர் திரு. திருமுருகன் ஆகியோர், இந்த பிரச்சார இயக்கத்தை தொடங்கி வைக்க உள்ளனர். இந்த இயக்கத்தின் போது, மண்வளத்திற்கு ஏற்ற பயிர்

சாகுபடி, பருவத்திற்கு ஏற்ற வேளாண் தொழில்நுட்பங்கள், ட்ரோன்கள் மற்றும் சமச்சீர் உரங்களின் பயன்பாடு குறித்தும், விவசாயிகளுக்கான அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்தும், அதிகாரிகள் மற்றும் வல்லுநர்கள் மூலம், கிராமங்கள் தோறும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறப்படும். விவசாயிகள், பண்ணை மகளிர், கிராமப்புற இளைஞர்கள், மற்றும், மகளிர் சுயஉதவிக் குழுவினர் இந்த இயக்கத்தில் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும் என அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

*ரங்கசாமி* 1 (7)

அரியாங்குப்பம் கொம்யூன் வீட்டு வசதி சங்கம் சார்பில், திம்மநாயக்கன் பாளையம் ஏழுமலையான் நகரில் இன்று நடைபெற்ற விழாவில், முதலமைச்சர் திரு ரங்கசாமி கலந்து கொண்டு, 44 பயனாளிகளுக்கு, உத்தேச மனை ஒதுக்கீட்டு சான்றிதழ்களை வழங்கினார். புதுச்சேரியில் நலிவடைந்த நிலையில் இருந்த பல கூட்டுறவு அமைப்புகளை, தமது அரசு பதவி ஏற்ற பிறகு மீண்டும் செயல்படுத்தி வருவதாக அவர் தமது உரையில் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்.....

**(வாய்ஸ்-ரங்கசாமி )**

*ரங்கசாமி 2* (5)

கூட்டுறவு மனை ஒதுக்கீட்டு விழாவில், சட்டப்பேரவை தலைவர் திரு ஆர் செல்வம், சட்டமன்ற உறுப்பினர் திரு பாஸ்கர் (எ) தட்சணாமூர்த்தி, மாநில வீட்டு வசதி இணையத்தின் மேலாண் இயக்குநர் திரு குணசேகரன், மற்றும் கொம்யூன் பஞ்சாயத்து அதிகாரிகளும், கூட்டுறவு சங்க நிர்வாகிகளும், கலந்து கொண்டனர்.

*ரங்கசாமி-பிப்டிக்* (9)

புதுச்சேரியில், உணவுப் பொருள் தயாரிப்பு மற்றும் பதனீட்டுத் தொழிலில் ஈடுபட்டுள்ள மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் 348 பேருக்கு, மூலதன கடனாக, தலா 40 ஆயிரம் ரூபாய் வீதம், மொத்தம் 1 கோடியே 39 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் நிதியுதவியை இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி வழங்கினார். சட்டப்பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், சட்டப்பேரவை தலைவர் திரு ஆர் செல்வம், மற்றும், புதுச்சேரி நகர்புற வளர்ச்சி முகமையின் திட்ட அதிகாரி திருமதி ஜெயந்தி உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொணடனர்.

*புதுச்சேரி கலால் வரி* (15)

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், இந்தியாவில் தயாராகும் வெளிநாட்டு மதுவகைகள், பீர், மற்றும், ஒயின் மீதான கலால் வரி மற்றும் கூடுதல் வரி, இன்று முதல் உயர்த்தப் பட்டுள்ளது. இந்த வரி உயர்வின் மூலம் அரசுக்கு ஆண்டுக்கு 185 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் கிடைக்கும் என எதிர்பார்க்கப் படுவதாக, கலால் துறை தெரிவித்துள்ளது. மேலும், மதுபான தொழிற்சாலைகள், மதுபான மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனைக்கான உரிமக் கட்டணம், ஏற்றுமதி-இறக்குமதி கட்டணங்களை உயர்த்த அரசு உத்தேசித்துள்ளது. இதற்கான அறிவிப்புகள், பொதுமக்களின் தகவலுக்காக, கலால்துறையின் இணையதளத்தில் வெளியிடப் பட்டுள்ளன.

இதற்கிடையே, மதுபானக் கடை உரிமையாளர்கள், இன்று 28 ஆம் தேதி முதல் கொள்முதல் செய்யப்படும் மதுபானங்களை மட்டுமே, புதிய விலைக்கு விற்க வேண்டும் என்றும், ஏற்கனவே கொள்முதல் செய்த மதுபானங்களை புதிய விலைக்கு விற்பவர்கள் மீது, சட்டப்படி அதிகபட்ச அபராதம் விதிக்கப்படும் என்றும் சட்டமுறை எடையளவை அலுவலகம் அறிவித்துள்ளது.

வானிலை (12)

இன்று வடமேற்கு வங்கக் கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி, அடுத்த 24 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற கூடும் என எதிர் பார்க்கப்படுகிறது. தென்னிந்திய பகுதிகளின் மேல் வளி மண்டல கீழடுக்கு சுழற்சியும் நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்திலும், புதுவை-காரைக்கால் பகுதிகளிலும் மேலும் சில நாட்களுக்கு மழை நீடிக்கலாம் என எதிர் பார்க்கப்படுகிறது. இன்றைய தினம் திருப்பூர், திண்டுக்கல், மற்றும் குமரி மாவட்டத்தில் கனமழைக்கும், தென்காசி, தேனி, நீலகிரி மாவட்டங்கள், மற்றும், கோவை-நெல்லை மாவட்டங்களின் மலைப் பகுதிகளில் மிக கன மழைக்கும், வாய்ப்பு இருப்பதாக வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. பலத்த காற்றுக்கு வாய்ப்பு உள்ள வங்கக் கடல் பகுதிகள் மற்றும் தமிழகத்தின் கடலோர பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

ஐபிஎல் (6)

ஐபிஎல் கிரிக்கெட்டில், நியூ சண்டிகரில் நாளை நடைபெற உள்ள முதலாவது குவாலிபையர் போட்டியில், பஞ்சாப்-பெங்களூரு அணிகள் மோத உள்ளன. புள்ளி பட்டியலில் 3 ஆவது இடத்திற்கு இறங்கிய குஜராத் அணி, வரும் வெள்ளிக்கிழமை நடைபெற உள்ள எலிமினேட்டர் போட்டியில், மும்பை அணியை எதிர் கொள்கிறது. 2 வது குவாலிபையர் போட்டி, ஜூன் 1 ஆம் தேதியும், ஐபிஎல் இறுதிப் போட்டி ஜூன் 3 ஆம் தேதியும் நடைபெறும்.